# புலிகளுடன் மோத இராணுவ அதிகாரிகள் மறுப்பு


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 பங்குனி 28 றமழான் 25 இதழ்: 60

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 11-04-1991


(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் புலிகளுடனை மோதலில் ஈடுபட அதிகாரிகள் உட்பட பல படையினர் மறுத்துள்ளதாகவும் அவர்கள் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

பிராந்திய தளபதிகளின் உத்தரவை மீறுபவர்கள் மீது விசாரணை நடாத்தப்படுமென

(4-ம் பக்கம் பார்க்க)

## இனப் பிரச்னை தீர்வு மே 15ல் முக்கிய முடிவு

[கொழும்பு]

இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக இலங்கை அரசின் முக்கிய விபரங்கள் அடங்கிய ஆலோசனை மே மாதம் 15-ம் திகதியளவில் வெளியிடப்படலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் திட்டப்படி திருமலை

[4-ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணம் சென்று 'பிரபா'வுடன் பேசுங்கள்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனுடன் பேச்சு நடத்துமாறு அமைச்சர் தொண்டமானை தமிழ்க் குழு ஒன்று கோரியுள்ளது.

தற்போதைய பிரச்சனைக்கு தீர்வு காண புலிகளுடன் பேசு

(4-ம் பக்கம் பார்க்க)

★ புலிகளுடனான—

# காரைநகர், மன்னார் மோதலில் 117 இராணுவம் கடற்படை பலி

## 187 படையினர் காயம்

(கொழும்பு)

காரைநகரிலும், மன்னாரிலும் இடம்பெற்றுவரும் உக்கிர மோதலில் இதுவரை 117 படையினர் கொல்லப்பட்டும் 187 படையினர் படுகாயமடைந்ததாகவும் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்தார்.

இவ்விரு மோதலில் 6 உயர் அதிகாரிகள் உட்பட 117 படையினர் கொல்லப்பட்டதுடன் 8 உயர் அதிகாரிகள் உட்பட 187 படையினர் படுகாயமடைந்தனர்.

இம்மோதலில் பெருமளவு புலிகள் கொல்லப்பட்டதாகவும் அவர் கூறினார். [சி]

## யுத்த நிறுத்தம் மலேசியா முயற்சி

[கோலாலம்பூர்]

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்திப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சியில் மலேசிய அரசு ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக மலேசிய அரசு தனது பூ முழுமையான

[4-ம் பக்கம் பார்க்க]

## காரைநகரில் தினமும் 15 வீடுகள் குண்டுவீசி அழிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் தினமும் நடைபெறும் தொடர்ச்சியான குண்டு வீச்சில் குறைந்தது 15 வீடுகள் வரையில் அழிக்கப்பட்டு வருகின்றன.

பத்தாவது நாளாக நேற்றும் அகோர விமானத் தாக்குதல் நடைபெற்றது நேற்று முன்தினம் இரவும், நேற்றுக் காலையும் ஆலடி, சின்னாலடி, வலந்தலை, களபூமி, கருங்காலி, பலகாட்டுப் பகுதிகளில் குண்டு வீச்சுக்கள் பல மணி

(4-ம் பக்கம் பார்க்க)

## தொண்டமான் தயார்

(கொழும்பு)

புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் சமரச முயற்சிகளை மேற்கொள்ளத் தாம் தயா

(4ம் பக்கம் பார்க்க)

## நிலைமையை பொறுத்தே தாக்குதல் நிறுத்தம்

(கொழும்பு)

க. பொ. த. (உயதரம்) பரீட்சை நடைபெறும் காலத்தில், வடக்கு-கிழக்கில் அரசுப் படைகளின் தாக்குதல் நிறுத்தம் குறித்து அப்போதுதான் தீர்மானிக்கப்படும் என முப்படைகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

[4ம் பக்கம் பார்க்க]

## சரவணை குண்டு வீச்சில் 2 பெண்கள் உடல் சிதறி பலி

(யாழ்ப்பாணம்)

சரவணை மேற்கு திலீபன் வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற அவ்ரோ குண்டு வீச்சில் மாணவி இருவர் உடல் சிதறிப் பலியானார்கள் ஒன்பதுபேர் படுகாயமடைந்தனர்.

இரவு 9 மணியளவில் முத்துலிங்கம் என்பவரின் வீட்டில் வீழ்ந்த குண்டு வெடித்ததில் வேலணை மத்திய மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி பாமதி சொக்கலிங்கம் (வயது 20), வீட்டுக்காரரின் மனைவி பாக்கியலட்சுமி முத்துலிங்கம் (வயது 55) உடல் சிதறி பலியானார்கள்.

இந்த வீட்டிலிருந்த மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 9பேர் படுகாயமடைந்தனர்.

[4-ம் பக்கம் பார்க்க]

## பாராளுமன்ற தொடர் கூட்டம்

(கொழும்பு)

இம்மாதம் 19ம் திகதி காலை 8-40 மணிக்கு பாராளுமன்றத்தின் 2வது தொடர் கூட்டம் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய் தினம் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா முக்கியத்துவம் வாய்ந்த உரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார். என்றும் கூறப்பட்டுள்ளது. (வி)

## மட்டக்களப்பு மோதலில் 5 இராணுவம் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற மோதலில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எட்டுப் படையினர் காயமடைந்தனர்.

இம்மாவட்டத்தில் சில மணி நேரம் இடம்பெற்ற நேரடி மோதலிலேயே ஐந்து படையினரும் கொல்லப்பட்டதாக அரசு தரப்பில் நேற்று தெரிவிக்கப்பட்டது. (சி)

## படைகள் உணர்ந்துவிட்டன ஜெனரல் கூறுகிறார்

[கொழும்பு]

வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கை மூலம் எதுவும் ஏற்படப்போவதில்லை என்பதை படைகள் உணர்ந்துவிட்டதாக ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## இந்திய வானொலி நிருபருக்கு கொலைப் பயமுறுத்தல்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள இந்திய வானொலி நிருபருக்கு விடுக்கப்பட்ட கொலைப் பயமுறுத்தலையடுத்து அவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தொலைபேசி மூலம் திரு. கருப்பசாமிக்கு அண்மையில் கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாம். இது பற்றி அவர் பாதுகாப்பு அமைச்சில் முறையிட்டார்.

இதையடுத்தே அவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஜெனரல் ரணதுங்க தெரிவித்தார். (சி)

## தமிழக இயந்திர படகை இல. கடற்படை தீயிட்டது

(சென்னை)

புதுக்கோட்டைக் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்களின் இயந்திரப் படகொன்றை இலங்கைக் கடற்படையினர் நேற்று முன்தினம் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

ஜனதா பட்டினத்தைச்

(4-ம் பக்கம் பார்க்க)

## அனைத்துக் கட்சி மாநாடு

(கொழும்பு)

அனைத்துக் கட்சி மாநாடு, மே மாதம் 13 14, 16, 17ம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ விளம்பரம்

### இருள் இரவில் அல்ல

மீரா வெளியீடு எந்த ஒரு ஆணும் வயதான காலத்தில் மனைவியை இழக்கக்கூடாது. அதேபோல் எந்த பெண்ணும் இளம் வயதில் கணவனை இழக்கக் கூடாது. இழந்தால்? (கி 4618)

### சனி நீராடு

எண்ணெய் தேய்த்து மில்க் வைற் ஒலிவ் தூள் பாவித்துத் தலை முழுகிவர உடல் வெப்பம் சமனடைந்து சுகவாழ்வு கிட்டுகிறது மில்க்வைற். (எ-1220)

### பாலாஜீ புத்தகசாலை

செங்கை ஆழியானின் யாக குண்டம், ஆறுகால்மடம், கந்தவேள் கோட்டம் மற்றும் புவியியல், வரலாறு முதலிய புத்தகங்கள் விற்பனைக்குண்டு. (புத்தாண்டை முன்னிட்டு விசேட தள்ளுபடி) 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (கி-4634)

### மணமகன் தேவை

எயர்லங்கா ஸ்தாபனத்தில் கணக்காளர் துறையில் வேலை பார்க்கும் CIMA இறுதிப் பரீட்சையை முடிக்க இருக்கும் யாழ். இந்து நற்குடும்பத்தைச் சேர்ந்த அழகிய 29 வயது 5' 2'' உயரமுள்ள மகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். குற்றமற்ற சாதகம். நட்சத்திரம். பூரம். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4633 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். (கி4633)


## யாழ். மாநகரசபை
# மின்சார நிலுவைகளை உடன் செலுத்துமாறு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

''யாழ். மாநகரசபைக்கு பொதுமக்கள் பெருமளவில் மின்சாரக்கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. அதை உடனடியாக செலுத்தும்படி, தற்போது நாம் பொதுமக்களைக் கேட்டுள்ளோம்''

இவ்வாறு யாழ். மாநகர சபை மின்சாரப்பகுதி உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார். அவர்மேலும் கூறியதாவது,

மின்சாரபாவனையாளர்கள், பெருமளவில் பணத்தைச் செலுத்தாமல் நிலுவையில் வைத்திருக்கின்றார்கள். மின்சாரம் பாவனைக்கு இல்லாத இந்த நேரத்தில், பொதுமக்களின் நன்மை கருதியே அவர்களின் நிலுவைப் பணத்தை கட்டம் கட்டமாக செலுத்தும்படி கேட்டுள்ளோம்.

மின்சாரம் பாவனைக்குவரும் சமயத்தில் பொதுமக்கள் தமது பணத்தை மொத்தமாக செலுத்துவது பெரும் கஷ்டமாக இருக்கும் என்பதினாலேயே, மேற்படி அறிவுறுத்தல்களை நாம் பொதுமக்களுக்கு அறிவித்து வருகின்றோம்.

இதன் பிரகாரம் பொதுமக்கள் பலர் தற்போது தமது நிலுவைப்பணத்தை செலுத்தி வருகிறார்கள் என்றும் அந்த உத்தியோகத்தர் மேலும்தெரிவித்தார். (வி)

## கருத்தரங்கு

[பண்டத்தரிப்பு]

போருட் நிறுவனம் நடாத்தும் 'பாலர் கல்வி அபிவிருத்தி' பற்றிய கருத்தரங்கு இன்று 11-ம் திகதி வியாழக்கிழமையன்று பிற்பகல் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நாளை 12-ம் திகதி வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் சண்டிலிப்பாய் இந்துமகா வித்தியாலத்தில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர்பிரிவுக்கான கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (72)

## இராசி பலன்

**11-04-1991**

**வியாழக்கிழமை**

சுவாதசி பி. இ. 3. 57 வரை, சதயம் மரணயோகம் ந. இ 12. 29 வரை, இராகுகாலம் பகல் 1. 36 முதல் 3. 06 வரை. சுபநேரம் காலை 7. 36முதல் 9. 06 வரை

**மேடம்:-** கல்வியால் பெருமை, தொழில் சிறப்பு, வரவுக்கு மீறிய செலவு.

**இடபம்:-** கடமை தவறுதல் தொழில் பாதிப்பு, குடும்ப சுகம்,

**மிதுனம்:-** அந்நியர் தொல்லை, வைத்திய செலவு, குடும்பக்கவலை,

**கடகம்:-** வாக்குக்கலகம், தாய்வழிகவலை, தொழில் பாதிப்பு,

**சிங்கம்:-** நண்பர் உதவி, குடும்ப உல்லாசம், காரிய பலிதம்,

**கன்னி:-** தொழில்பாராட்டு பழைய நினைவுகள், மறைமுக எதிர்ப்பு

**துலாம்;-** கண்ணியக்குறை பணியாள் தொல்லை, அலைச்சல் மிகுதி,

**விருச்சிகம்:-** துயரச் செய்தி, பொருளாதாரம் பாதிப்பு, காரியதாமதம்.

**தனுசு:-** விவேகமற்றமுடிவு, தற்பெருமை, குடும்ப அலைச்சல்,

**மகரம்:-** கடுமையான போக்கு, வழித்தொல்லை, பயணம்.

**கும்பம்;-** சகோதர உதவி, பணவரவு. புதியஸ்தானம், புகழ்,

**மீனம்:-** வாழ்க்கை வசதி, அதிகாரம், தொழில் கஸ்டம்;

— ஜோஸ்யர்

## அடியார்கள் திக்குளிப்பு

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை கிழக்கு அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை நாட்டில் அமைதி, சமாதானம்,சுபீட்சம் வேண்டி விஷேட அபிஷேகம், பூசைகளும் அடியார்கள் தீக்குளிப்பும் நடைபெற்றது. ( 54)

## இலவச உணவுப் பொருட்கள்

(பண்டத்தரிப்பு)

காரைநகர், கீரிமலை, இளவாலை ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்து தஞ்சமடைந்திருக்கும் மக்களுக்கு பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இலவச உலர் உணவுப்பொருட்களை கடந்த 7ம் திகதி தொடக்கம் வழங்கி வருகின்றது. (72)

## இராஜகோபுர வேலை பூர்த்தி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தின் [சிவன்கோவில்] இராஜகோபுர நிர்மாண வேலைகள் சுமார் 8 லட்சம் ரூபாசெலவில் பூர்த்தியடைந்துள்ளன. வெகுவிரைவில் இவ்இராஜகோபுரத்திற்கு வர்ணம் பூசும் வேலைகள் ஆரம்பமாகவுள்ளன.

## ரதோற்சவம்

[கொக்குவில்]

கொக்குவில் மேற்கு வராகி அம்பாள் கோவில் வருடாந்த மகோற்சவம் 5-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது எதிர்வரும் 14-ம் திகதி புதுவருடப்பிறப்பன்று ரதோற்சவமும் மறுதினம் தீர்த்தோற்சவதுடன் திருவிழா பூர்த்திடையும். (135)

## கட்டாக்காலி மாடுகள் ஏலத்தில் விற்பனை

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டை கிராமிய உற்பத்திக் குழுவினரால் கட்டாக்காலி மாடுகள் நேற்று முன்தினம் ஏலத்தில் விற்கப்பட்டன.

இப்பகுதியில் உள்ள விளைநிலங்களுக்குள் கட்டாக்காலியாகத் திரிந்து பயிர்வகைகளை அழித்து வந்த இம் மாடுகளை உற்பத்திக்குழுவினர் பிடித்து வைத்து நீண்ட நாட்களாகியும் எவரும்உரிமை கோர முன்வராததால் இவை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## பாண் விலை 9 ரூபா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாண் பேக்கரியில் தயாரிக்கப்படும் 350 கிராம் நிறையுள்ள பாண் ஒன்பது ரூபாவாக விற்கப்படுவதாகவும், சில தனிப்பட்ட வியாபாரிகள் இப்பாணை வாங்கி கூடிய விலையில் விற்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும், இப்படி விற்பவர்கள் பற்றிய தகவலை தமக்கு தெரிவித்தால் அவர்களுக்கான பாண் விநியோகம் நிறுத்தப்படுமென்றும் சங்க பொதுமுகாமையாளர் தெரிவித்தார். (72)

## சைக்கிள் இலக்க தகடுகள்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை அலுவலகத்தில் இவ்வருடத்திற்கான சைக்கிள் இலக்க தகடுகள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் ட்டு வருகின்றன

சைக்கிள் இலக்கத்தகடுகள் பெறுவதற்கு ரூபா 7-50 சதமும், சைக்கிள் இலக்கத்துடனும் நல்லூரில் உள்ள மாநகர சபைப் அலுவலகத்தில் சைக் உரிமையாளர்கள் நேரில் சென்று பெற்றுக்கொள்ளுமாறும் வேட்கப் பட்டுள்ளனர்.

## ஆயுர்வேதத்துறையை அபிவிருத்திசெய்ய நடவடிக்கை

[கிளிநொச்சி நிருபர்]

கரைச்சி பிரதேச சபையின் முரசுமோட்டை உப அலுவலக நிர்வாகப் பிரிவில் ஆயுர்வேத வைத்தியத் உதவிவிருத்திசெய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முரசு மோட்டையில் நடைபெற்ற அபிவிருத்திகருத்தரங்கில் முரசுமோட்டை அலுவலக பொறுப்பதிகாரி திரு. இ. கோபாலகிருஷ்ண பிள்ளை கூறினார்:

திரு கோபாலகிருஷ்ண பிள்ளை மேலும் பேசுகையில், எமது பிரிவில் மூன்று இலவச ஆயுர்வேத வைத்தியசாலைகள் உள்ளன இவ் வைத்திய சாலைகளின் அபிவிருத்திக்கும் மருந்துத்தட்டுப்பாட்டை நிவர்த்திக்கவும் பலவித சிரமத்தின் மத்தியில்நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இன்று மேற்கத்திய மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே சுதேச மருந்து உற்பத்திக்கும் இம் மருத்துவ சேவைக்கும் ஆதரவும் புத்தூக்கமும் நல்கவேண்டும் என்றார்.

இவ் வைபவத்தை முன்னிட்டு மரம் நடுகை இயக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வட்ட அவை உபதலைவர் திரு. மு. கந்தசாமி, ஆயுர்வேத வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் இராசவேல், சுகாதாரப் பரிசோதகர் கதியாகலிங்கம் உட்பட பலர் உரையாற்றினார்கள். (83)

## பாடசாலைகீதம் அவசியம்

(உடுவில்)

''எமது பாடசாலைகள் பலவற்றுக்கு பாடசாலைக் கீதம் இல்லாமல் உள்ளது. இதுவரை காலத்திலும்பாடசாலைக்கென கீதம் இயற்றாத பாடசாலைகள் உடனடியாக சிறந்தபாடசாலைக் கீதம் ஒன்றை இயற்றிக்கொள்ளவேண்டும்''

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இவ்வாறு கூறியுள்ளார்.

மருதனாமடம் கோட்டக் கல்விப் பிரிவு நடாத்திய தமிழ்மொழித்தின விழாவில் திரு. சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவுக்கு உதவிக்கல்விப் பணிப்பாளர்திரு.எஸ் தனஞ்செயன் தலைமை வகித்தார். (109)

## படிவங்கள் தட்டுப்பாடு

[கொழும்புத்துறை]

யாழ். மாவட்டத்தில் உள்ள பல கிராமசேவகர்களிடம் பொதுமக்களுக்கு வழங்கும் நற்சாட்சிப்பத்திரம் வதிவிட அத்தாட்சிப்பத்திரம் போன்ற படிவங்கள் இல்லாமையால் பொது மக்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

சில அத்தியாவசியத்தேவைகளுக்கு, அடையாள அட்டை பெற வேலைவாய்ப்புக்கு விண்ணப்பிப்போர் இதனால் பெரிதும் பாதிக்கப் டுகின்றார்கள். [154]

## முக்கிய கூட்டம்

[யாழ்ப்பாணம்,

காங்கேசன் சீமெந்துக்கூட்டுத்தாபன சகல ஊழியர்களையும் எதிர்வரும் சனிக்கிழமை 13ம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம்இந்துக் கல்லூரியிலுள்ள குமாரசாமி மண்டபத்தில் நடைபெற இருக்கும் தொழிற்சாலை சம்பந்தமான கூட்டத்திற்கு தவறாது சமூகம் தரும்படி நிர்வாக முகாமையாளர் திரு வை. த. சிவலிங்கம் கேட்டுள்ளார். [வி]

## மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்கவேண்டும்

[உடுவில்]

''சமூகத்தில் எல்லா மட்டத்திலும் கல்வி அபிவிருத்திக்குரிய சூழ்நிலையை வகுத்து மாணவர்களை நல்ல பிரஜைகளாக்கி நாட்டின் அபிவிருத்திக்கு உதவவேண்டும் இக்குறிக்கோள் கல்வி நிறுவன மட்டத்திலும்சரி, கல்வி நிர்வாக மட்டத்திலும் சரி முறையாக பின்பற்றப்படவேண்டும்.

மருதனாமடம் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான இருநாள் முகாமைத்துவ கருத்தரங்கில் உரையாற்றிய முகாமைத்துவ கல்வி அதிகாரி திரு தனிகாசலம் பிள்ளை இவ்வாறு கூறினார்.

கோட்டக்கல்வி உதவிப் பணிப்பாளர் திரு. எஸ் தனஞ்செயன் பயிற்சி வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தார்.

முகாமைத்துவம் வருடாந்த அமுலாக்கல் திட்டம் பாடசாலை உள்ளகமேற்பார்வை, அதிபரின் கடமைக் கூறுகள், கையிருப்பு ஏடுகள் பேணல், நிர்வாக அமைப்பு, நிதிமுகாமைத்துவம் போன்ற பல விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

கல்வி அதிகாரிகள் திருவாளர்கள் இ சிவானந்தன நா. கணேசபிள்ளை, சுந்தரலிங்கம், சு. இரட்ணராசா, அதிபர்கள் த. முத்துக்குமாரசாமி இ. பஞ்சலிங்கம், இ கணேசன், த. முத்துக்குமாரசாமி உட்பட பலர் கருத்துரை வழங்கினர். (109)


## அறிவித்தல்

**யாழ் மாவட்ட**

**புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்**

**விசேட பொதுக்கூட்டம்**

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 18-04-91 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இருபாலைவீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள சங்கத் தலைமைக்காரியாலயத்தில் கூட்டப்பெறும் பொதுச்சபை பிரதிநிதிகள் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

நிகழ்ச்சி நிரல் மற்றும் விபரங்கள் பொதுச்சபை பிரதிநிதிகளுக்கு தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

- செயலாளர்

இருபாலை வீதி,
கோண்டாவில்.
10-04-1991

[கி 4635]

# வர்த்தக ஊழியர்களுக்கு ஞாயிறு லீவுவழங்கவேண்டும்

## யாழ். வர்த்தக சங்கம் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

வர்த்தக நிலையங்களில் வேலைசெய்யும் ஊழியர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் கட்டாயமாக லீவு வழங்க வேண்டும் என்று நாம் சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் அறிவித்துள்ளோம்.

இவ்வாறு யாழ். வர்த்தகர் சங்க செயலாளர் திரு. சி நமசிவாயம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது

மேற்படி லீவை தமக்கும் கட்டாயம் வழங்கவேண்டும் என்று, வகுப்பு தொழிலாளர்களும் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அவர்களின் வேண்டுகோளை நாம் ஏற்றுக்கொண்டபோதிலும் ஞாயிற்றுக்கிழமைகளில், கொழும்பிலிருந்து லொறிகளில்வரும் பொருட்களை தனிப்பட்டவர்களைக்கொண்டு இறக்குவதற்கு ஆட்சேபம் தெரிவிக்கக் கூடாது என்று நாம் எழுத்து மூலம் அவர்களுக்கு தெரிவித்துள்ளோம்

இதேவேளை யாழ். நகருக்கு வரும் பொதுமக்கள் பொது மலசல கூடமின்றி மிகவும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றார்கள். நகர மத்தியில் பழுதடைந்த நிலையில் இருக்கும் மலசல கூடங்களை உடனடியாக திருத்தி பாவனைக்கு விடுமாறு யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வர்த்தக சங்கத் தலைவர் திரு. வி குணரட்ணம்தலைமையில் யாழ் சங்கரப்பிள்ளை மேல்மாடிக் கட்டிடத்தில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் மேற்படி தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம், அடுத்த மாதம் முற்பகுதியில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [வி]

# ‘சுயதொழில் வேலைவாய்ப்பு மூலம் வருவாய் பெறலாம்’

[கொழும்புத்துறை]

தற்போதைய போர்க்காலச் சூழ்நிலைக்கேற்ப கிராமங்களில் பெண்களை சுயதொழில் வேலைவாய்ப்பில் ஈடுபடுத்தி வருவதன் மூலம் சுயமாக வருவாய் ஈட்டமுடியும் என்று கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வை. ராஜராஜேஸ்வரன் கைதடி வடக்கு மாதர் கிராம முன்னேற்றச் சங்கப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தற்போது மரக்கறிவிலைகள் மலிவாக இருப்பதால் மரக்கறிகளில் வற்றல் தயாரித்தால் சந்தைப் படுத்தித் தரமுடியுமென்றும், தையல் பயிற்சி வகுப்புகளையும் ஆரம்பிக்கும்படியும், ஆசிரியர்களை ஒழுங்குசெய்து தருவதாகவும், தையல் இயந்திரம் ஒன்று பெற்றுத்தருவதாகவும் அவர் உறுதியளித்தார்.

இக்கூட்டம் சங்கத்தலைவி திருமதி விசாலாட்சி இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. (154)

# 230 விவசாயிகளுக்கு மண்ணெண்ணை சிறுதானியம் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

புலோலி மேற்குப் பகுதியில் உப உணவுச் செய்கையை ஆரம்பிக்க 230 விவசாயிகளுக்கு மண்ணெண்ணை பயறு, கௌபி, குரக்கன், எள்ளு போன்ற சிறுதானிய உணவு வகைகள் வழங்கப்பட்டன.

மேற்படி உதவிகளை புலோலி மேற்கு சதாவதானி ஐக்கிய நாணய சிக்கன சேமிப்புச் சங்கத்தினர் ‘கெயர்’ உதவித் திட்ட அனுசரணையுடன் வழங்கியதையடுத்து பயிர்ச் செய்கைஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இச்சங்கத்தின் தலைவர் திரு. வே. மார்க்கண்டேயபிள்ளை தெரிவித்தார். (150)

# ‘தமிழரின் வரலாற்றுப் பின்னணியை சமூகசேவை கழகங்கள் வெளிப்படுத்த வேண்டும்’

(யாழ்ப்பாணம்)

இன்றைய காலகட்டத்தில் சமூக சேவைகழகங்கள் வெறுமனே துயர் துடைப்பு பணிகளுடன் மட்டும் நின்று விடாமல் தமிழரின் வரலாற்று பின்னணி பற்றி மாணவர்களும் மக்களும் அறியும் வகையில் கருத்தரங்குகள் கூட்டங்கள் ஒழுங்கு செய்வது அவசியம்.

யாழ். புதிய உயர் கல்லூரியின் சமூகசேவைப் பிரிவான ‘‘தென்றலின்’’ புதிய நிர்வாக சபைக் கூட்டத்தில் பேசுகையில் விரிவுரையாளரும், எழுத்தாளருமான திரு. கே. குணராசா இவ்வாறு கூறினார்:

விரிவுரையாளர் திரு. என். குழந்தைவேலு பேசுகையில் வடக்கில் நாம் இவ்வளவுபாதுகாப்பாக வாழும் நிலை ஏற்பட்டமைக்கு கிழக்கைச்சேர்ந்த பல போராளிகள் இங்கு முகாம்களின் முன்னின்று போராடுவதுதான் காரணம் என்றும் அவர்கள் காயப்பட்டு களத்தில் விழும்போது அவர்களுக்கு உரிய உதவிகளை பராமரிப்பை செய்வதில் மாணவர்கள் முன்னிற்க வேண்டும் என்றும் கூறினர்.

கூட்டத்திற்கு தலைமை வகித்த தென்றல் தலைவர் செல்வன் கா. யோ. கிரிதரன் பேசுகையில்: காயமடைந்த போராளிகளை பராமரிப்பதிலும் சரி, இரத்ததானம் செய்வதிலும் சரி உலர் உணவு பொருட்களை தயாரித்துக் கொடுத்து உதவுவதிலும் சரி மாணவர்களின் பங்கு மிக மிக முக்கியமானது’’ என்றார்.

விரிவுரையாளர்கள்; திரு: அ. குமாரவேலு, திருமதி எஸ் அருள்நங்கை ஆகியோரும் உரையாற்றினர்கள்.

# சைக்கிள் திருடியவர் புலிகளிடம் சரண்!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைப் பகுதியில் இடம்பெற்று வந்த சைக்கிள் திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஒருவர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியிடம் சரணடைந்துள்ளார்.

சந்தாதோட்டம் உத்திராவத்தையைச் சேர்ந்த நபர் ஒருவரே விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணினரிடம் சரணடைந்தவராவர்.

இவர் வைத்தியசாலை நோயாளர்களுக்கு இரத்தம் வழங்கும் தரகராகவைத்திய சாலைப்பகுதியில் நடமாடி சைக்கிள் திருட்டுக்களிலும் ஈடுபட்டுவந்துள்ளார் என்று கூறப்படுகிறது. கடந்தவாரம் வைத்தியசாலைக்கு வந்த ஒருவரின் சைக்கிளை இவர் திருடிச்சென்றபோது இது பற்றி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் விசாரணை செய்து அவரது வீட்டிலிருந்து சைக்கிளைக்கைப்பற்றினர்.

ஆனால் அவர் தலைமறைவாகியிருந்தார். பின்னர் அவர் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரிடம் சரணடைந்துள்ளார். (52)

# அப்பியாசக் கொப்பிகள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பிரதேசத்திலுள்ள பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக 35 ஆயிரம் அப்பியாசக்கொப்பிகள் பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அலுவலகத்திற்கு கல்வித் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கொத்தணி ரீதியாக இந்த அப்பியாசக்கொப்பிகளை சகல பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்பட்டுவருவதாக இது பற்றி தெரிவிக்கப்படுகின்றது. (72)

# பஞ்சாப் தீவிரவாதிகளால் நாடகம் பார்த்துக்கொண்டிருந்த இருபதுபேர் சுட்டுக்கொலை

(சண்டிகார்)

நாடகம் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் 18 பொதுமக்கள் பஞ்சாப் தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். 20 பேர் இச் சம்பவத்தில் படுகாயம் அடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை சண்டிகாரிலிருந்து 230 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள நெவிலவில கிராமத்திலேயே இப் படுகொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

துப்பாக்கி நபர்கள் தலைமறைவாகிவிட்டதாகவும் இவர்களை தேடும் பணியில் பாதுகாப்பு படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிறிதொரு சம்பவத்தில் பஞ்சாப் மாநில அரசுப்பணி உயர் அதிகாரி திரு. ஹரி ஓம் பங்ளானி மற்றும் 8போராளிகள் உட்பட 38 பேர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளனர். [க]

# 2000 ஆண்டில் ‘எயிட்ஸ்’ நோயாளிகளின் தொகை 2 கோடியாக அதிகரிக்கும்

(லண்டன்)

2000 வது ஆண்டில் எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்படுபவர்களின் தொகை 2 கோடியாக இருக்கும் என உலக சுகாதார நிறுவன பணிப்பாளர் தகவல் வெளியிட்டுள்ளார்.

தற்போது 1 கோடி மக்கள் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் இத்தொகை விரைவில் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அபிவிருத்தியடைந்து வரும் நடுகளிலேயே எயிட்ஸ் நோயால் பீடிக்கப்படுபவர்களின் தொகை அதிகமாக இருப்பதாகவும்தெரிவித்தார்.

# தமிழக மீனவர் விவகாரம்: மத்திய அரசு தலையிடுமாறு மாநில அரசு நெருக்கடி

(சென்னை)

தமிழகக் கரையோர மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்த விவகாரத்தில் இந்திய மத்திய அரசு தலையிடவேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டுள்ளது.

இவ்வாறு தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு வி இராமச்சந்திரன் சென்னையில் நேற்றுப் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இவ்விடயம் தொடர்பாகத் தமிழக அரசின் உயர் அதிகாரிகள், மத்திய அரசுடன் அடிக்கடி தொடர்பு கொண்டுவருவதாகவும் தெரிவித்தார்.

தமிழகக் கடற்கரையோர மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்த விவகாரத்தில், மத்திய அரசைத் தலையிடுமாறு மாநில அரசு வற்புறுத்தவேண்டும் என்று கோரி இராமேஸ்வரம் கடலோர மீனவர்கள் கடந்த மாதம் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தியதும் தெரிந்ததே. [க]

# ஓய்வு பெற்றார்

(மாங்குளம்)

முல்லைத்தீவு சமநல சேவை உதவி ஆணையாளர் திரு, செல்லையா பஞ்சலிங்கம் இவ்வருடம் முதல் ஒய்வுபெற்றுள்ளார். (150)

# சனசமூகநிலைய வருடாந்த விளையாட்டு போட்டிக்கு ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் வழமை போல் இவ்வருடமும் நடைபெறவுள்ளன.

இப்போட்டித் தொடர்புகள் ஆரம்பத்தில் 7 வீரர்கள் பங்கேற்கும் 12 ஓவர் கூட்டு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் ஆட்டம்ஆண்களுக்கான ஓவர் கேம் கரபந்தாட்டம் ஆகியன நடைபெறவுள்ளன,

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் சனசமூக நிலையங்கள் சமாசத்தில் பதிவு செய்யப்பட்ட நிலையங்கள் யாவும் உரிய முறையில் இம் மாதம் 15ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக சமாச விளையாட்டுக்குழுச் செயலாளர் திரு. இ. நவரட்டினம், திருவள்ளுவர் சன சமூக நிலையம் மடம் வீதி, யாழ்பாணம் என்ற விலாசத்தில் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றனர், [154]

# 105 இலங்கை மீனவர்கள் மாலைதீவு கடலில் கைது

(மாலே]

மாலைதீவுக் கடல் எல்லைப் பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடித்த நூற்றுக்குமதிகமான இலங்கை மீனவர்களை மாலைதீவு அரசு கைது செய்துள்ளது.

17 மீன்பிடி வள்ளங்களில் சென்ற 105 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இந்த மீனவர்களில் 88 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனைய மீனவர்கள் மீது மாலைதீவு அரசு வழக்கு தொடரவுள்ளதுடன் இவர்களின் 17 வள்ளங்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது (பூ]

# வீதி திருத்தம்

[கொழும்புத்துறை]

யாழ். ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலையத்தினர் சிரமதான மூலம் ஆடியபாதம் வீதி, அடைக்கலநாயகி வீதிகளை திருத்தம் செய்தனர். [154]

# இலங்கை சரக்கு கப்பல் வளைகுடாவில் தீப்பற்றியது

(ரியாட்)

வளைகுடா தென்பகுதியில் கடந்தவாரம் இலங்கை சரக்குக் கப்பல் தீப்பற்றி எரிந்தது. சுமார் 16 மணி நேரம் தீயுடன் போராடி அமெரிக்க, பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் தீயை அணைத்தன.

'லொயிட்ஸ்' கம்பனிக்கு சொந்தமான இக்கப்பல் நடுக்கடலில் தீப்பற்றியபோது அபாய அறிவிப்பு மணி ஒலித்ததையடுத்து அப்பகுதியில் சென்று கொண்டிருந்த அமெரிக்க பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் அங்கு விரைந்து தீயை அணைத்தன.

கப்பல் மாலுமிகள் மூவர் படுகாயமடைந்தனர். விபத்துக்கான காரணங்கள் தெரியவில்லை. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (சி)

## புலிகளுடன் மோதும் படையினருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் புலிகளுடனான மோதலில் கொல்லப்படும் படையினருக்கு, இறப்பின் பின் பதவி உயர்வு வழங்கப்பட்டுவருகின்றன.

இத்தகவலை ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்தார்.

இதுவரை காலமும் இவ்வாறான இறப்பின் பின்பான பதவி உயர்வு, சில முக்கிய அதிகாரிகளுக்கே வழங்கப்பட்டு வந்ததாகவும் அவர் தெரிவித்தார். (சி)

## கடற்படை முகாம் கட்டடங்கள் தகர்ப்பு

[யாழ்ப்பாணம்]

காரைநகர் கடற்படை முகாம் கட்டடங்கள் பல புலிகளின் கடும் தாக்குதலில் தகர்க்கப்பட்டுள்ளதை ஜெனரல் சிறில் ரணதுங்க ஒப்புக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக பத்திரிகையாளர் கேட்ட கேள்விகளின்போது பல கட்டடங்கள் புலிகளின் மோட்டார், பசிலன் தாக்குதலில் அழிக்கப்பட்டு விட்டதாக கூறினார்.

அப்பகுதியில் தொடர்ந்து மோதல் நடைபெறுவதாகவும் ரணதுங்க கூறினார் [சி]

## நிலைமைய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்துத் தற்போது அரசின் உயர் மட்டத்தில் ஆராய்ந்து வருவதாகவும், ஆனால் உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 30ம் திகதி, 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையின்போது முதலில் தாக்குதலை நிறுத்த ஒப்புக்கொண்ட படையினர், பின்னர் அதனை நிராகரித்ததும் தெரிந்ததே. (சி-க)

## தமிழ்ப் போராளிகளுக்கு இனிமேல் 5 ரூபா

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகளின் மறுவாழ்வுக்காக தமிழக அரசு இதுவரை 32 கோடியே 56 லட்சம் ரூபாவைச் செலவு செய்துள்ளது.

இதில் 21 கோடியே 22 லட்சம் ரூபாவை மத்திய அரசு, மாநில அரசுக்கு வழங்கிவிட்டது.

இலங்கை அகதிகளின் மறுவாழ்வுத்துறைச் செயலர் திரு ராமதாஸ் இத்தகவலை வெளியிட்டார்.

புதுக்கோட்டையில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கைப் போராளிகளுக்கு இன்றுமுதல் உணவுக்குப் பதில் ஐந்து ரூபா வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை எதிர்வரும் தேர்தல் பாதுகாப்பை முன்னிட்டு இலங்கை அகதிகளை உன்னிப்பாகக் கவனிக்குமாறு மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது, [பூ]

## போராட்டத்தில் பெண்களின் பங்கு பெருமளவு உள்ளது

(யாழ்ப்பாணம்)

''என் குடும்பம், என் வீடு, என் கணவன் என்று பெண்கள் நினைத்து வாழ்ந்த காலம் இன்று மாறிவிட்டது. இன்றைய போராட்டக் காலத்தில் பெண்களின் பங்களிப்பு பெரும் பங்கை வகிக்கின்றது. இந்த அளவுக்கு பெண்களின் உணர்ச்சிகளைத் தூண்டியவர் தியாகி அன்னைபூபதிதான்.''

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அன்னைபூபதியின் 3 வது நினைவஞ்சலிக் கூட்டத்தில் 2 வது வருட கலைப்பீட மாணவி செல்வி பவானி கூறினார்.

மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் கே. சத்தியநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் செல்வி பவானி மேலும் கூறியதாவது:

''பிரித்தானிய வெள்ளையர்களிடம் தமது சுதந்திரத்துக்காக போராடி வெற்றி கண்ட இந்தியாதான் ஈழத் தமிழ் மக்களின் சுதந்திர விடுதலைப் போராட்டத்துக்கு இடையூறாக குறுக்கே நிற்கின்றது.

இந்திய அமைதிப் படை இலங்கைக்கு அமைதி காக்க வந்ததாகக் கூறி, தமிழ்மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்குக் குறுக்கே நின்றதனால்தான், இச்செயலைக் கண்டித்து அன்னை பூபதி 30நாட்கள் ஆகாரமின்றி உண்ணாவிரதம் இருந்து, தன் உயிரைத் தமிழ் ஈழத்திற்காகத் தியாகம் செய்தார். வடக்கில் தியாகி திலீபன் என்றால், கிழக்கில் அன்னை பூபதி என்று கூறலாம் என்று கூறினார்.

இக்கூட்டத்தில் கலாநிதி சிற்றம்பலம், கலைப்பீட மாணவன் விசாகன் ஆகியோரும் உரையாற்றினர். (வி)

## காரைநகரில் ஐவர் காயம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர்ப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விமான, ஷெல் தாக்குதல்களில் ஐவர் படுகாயமுற்றதாகத் தெரியவருகின்றது.

களபூமியில் மூவரும், வலந்தலை, ஆலடி ஆகிய இடங்களில் தலா ஒருவரும் படுகாயமுற்றனர். நேற்று இரவும் விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன. (சி)

## இலங்கை - இந்திய கூட்டுக்குழு

(புதுடில்லி)

இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையிலான கூட்டுக்குழுவொன்றினை ஏற்படுத்த இரு நாடுகளும் இணைந்துள்ளன.

வர்த்தகம், கலாசாரம் இருதரப்பு உறவுகள் மற்றும் ஒன்றிணைந்து செயல்படும் திட்டங்கள் ஆகியவற்றில் கவனஞ் செலுத்துவதற்கு முடிவாகியுள்ளது.

இந்திய வெளியுறவுச் செயலர் முஜ்குந்துபே, இலங்கை வெளியுறவுச் செயலர் திரு. பேர்னாட் திலகரட்ண ஆகியோர் கடந்த திங்களில் இருந்து பேச்சுக்கள் நடத்தி நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ளனர்.

இந்த ஆண்டு முடிவதற்குள் இந்தக் கூட்டுக்குழு அமைக்கப்படவுள்ளது. (பூ)

## மகஸீன் சிறையில் வாடும் 350 தமிழ் இளைஞர்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த 350க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் தற்போது 'மகஸீன்' சிறைச்சாலையில் பெரும் துன்பம் அனுபவித்து வருகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். வெளியுலகத் தொடர்பு எதுவுமற்ற நிலையில் இவர்கள் தற்போதுள்ளனர்.

இவர்களை விடுதலைசெய்ய, சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் எனப் பெற்றோர்கள் கோரியுள்ளனர். (சி)

## காரைநகரில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நேரம் நடைபெற்றது.

இத்தாக்குதல்களில் 17 வீடுகள் வரை பலத்த சேதமடைந்தன. ஆடுகள், மாடுகளும் பலியாகின. இப்பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறிவிட்டதால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இத்தாக்குதல்களில் வை-12 ரக விமானங்கள் இரண்டும், ஹெலிகொப்டர் ஒன்றும், சீ-பிளேனும் ஈடுபட்டன.

இதேவேளை, முகாமிலிருந்து ஷெல் தாக்குதலும், கடலில் இருந்து பீரங்கித் தாக்குதலும் இடம்பெற்றன. [சி]

## இனப் பிரச்னை

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகப்பகுதி, அம்பாறையிலுள்ள சிங்களப்பகுதி தனியாகப் பிரிக்கப்பட்டு வடக்கு-கிழக்கின் ஏனைய பகுதிகள் தனியானதொரு மாகாணத்தின்கீழ் கொண்டுவரப்படும்.

தற்போது இதுதொடர்பாக அரசு முக்கியஸ்தர்கள் புதிய திட்டமொன்றைத் தயாரித்துவருகிறார்களாம். [சி]

## புலிகளுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பாக மேஜர் ஜெரி டி சில்வா இருக்கும்போது அவருக்கு மேலாக மேஜர் ஜெனரல் வைத்தியரத்ன ஜனாதிபதியின் ஆலோசனையின் பெயரில் நியமிக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. [சி]

## யுத்தநிறுத்தம்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பங்களிப்பை நல்கவேண்டும் என அரச சார்பற்ற பொது ஸ்தாபனங்கள் பல விடுத்த வேண்டுகோளையடுத்து கோலாலம்பூரில் இதற்கான முயற்சிகள் துரிதமாக நடைபெற்றுவருகிறதாம்.

இது குறித்து மலேசிய அரசு புலிகளுடனும், இலங்கை அரசுடனும் தொடர்பு கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

எனினும் இம்முயற்சியை ஆதரித்துள்ள இலங்கை அரசு சமரசம் செய்யும்படி தான் கோரவில்லை என்றும் கூறியுள்ளது. [க-சி]

## தமிழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த 3 மீனவர்கள் இயந்திரப்படகில் மீன் பிடிக்கச் சென்றதாகவும் இவர்களை வழிமறித்த இலங்கைக் கடற்படையினர் மூவரையும் மற்றொரு படகிலேற்றிவிட்டுப் படகைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கரை சேர்ந்த 3 மீனவர்களும் இச்சம்பவம் பற்றித் தமிழக பொலிஸ் உயரதிகாரியிடம் முறையிட்டுள்ளனர். (க)

## சரவணை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மரணமான பெண்ணின் கணவரான முத்துலிங்கம் (வயது 60), மு. வனிதாமலர் (வயது 20), மு. கலாமணி [வயது 23), மு. நகுலேஸ்வரன் (வயது 15) ஆகியோர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், இவர்களுடன் பொ. சொர்ணம்மா (வயது 45], க. பார்வதி (வயது 90), க. புஷ்பகலாவதி (வயது 45), க. ரஞ்சிதகௌரி (வயது 22), சு. கந்தசாமி (வயது 54) ஆகியோரும் பலத்த காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

பல மணித்தியாலங்களாக இப்பகுதியைச் சுற்றி வட்டமிட்டுவந்த இந்த விமானம் சரவணை மேற்கு முங்காளைட்புலம் என்ற இடத்திலும் இரு குண்டுகளைப் போட்டது. அதில் ஒன்று இனி ஏக்கை குளத்தில் விழுந்ததினால் வெடிக்கவில்லை. மற்றையது வெடித்ததினால் அந்த இடத்தைச் சேர்ந்த சதாசிவம் என்பவரின் தோட்டத்தில் இருந்த சுமார் 3000 கன்றுப் புகையிலை பலத்த சேதத்துக்குள்ளாயின.

சரவணையில் திரு மு முத்துலிங்கம், திரு. சு. கந்தசாமி, க. சொக்கலிங்கம், சு. பொன்னுத்துரை, அ. தட்சணாமூர்த்தி, சு. சோமசேகரம் (ஈழநாடு ஊழியர்), ச. நித்தியானந்தன், வ. மாணிக்கம், ஆ. கிருஷ்ணன் ஆகியோர்களினது வீடுகள் உட்பட இன்னும் பல வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாயின.

(75-56-152)

## அரச அதிபருக்கு பிரிவுபசாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டுக்கு யாழ். செயலக ஊழியர்கள் பிரிவுபசாரம் ஒன்றை நடாத்தினார்கள்.

அரச அதிபரைப் பாராட்டி திருவாளர்கள் கா. பாலரத்தினம், நித்தியராஜ், செ. பதமநாதன், க. சண்முகநாதன், சிவபாலன் உட்பட வேறு பலரும் உரையாற்றினார்கள்.

ஈற்றில் அரச அதிபர் அனைவருக்கும் நன்றி தெரிவித்து உரையாற்றினார். (வி-71)

## படைகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவம்-புலிகளின் சடலங்கள் பரஸ்பரம் ஒப்படைக்கப்பட்டதன் மூலம் இரு தரப்பினரிடையேயும் புரிந்துணர்வு ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் உருவாகி உள்ளாகவும் அவர் கூறினார்.

இது, பிரச்சனைக்கு ஒரு தீர்வைக் காண உதவும் என பி. பி. ஸி. யும் தெரிவித்தது. (சி)

## அனைத்துக் கட்சி

1-ம் பக்கத் தொடர்ச்சி]

இம்மாநாட்டில், வடக்கு-கிழக்குப் பிரச்சனை தொடர்பாக ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## யாழ்ப்பாணம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வது மிக அவசியம் என்றும் அக்குழு கூறியுள்ளது.

திரு. பிரபாகரனை யாழ்ப்பாணத்தில் சந்திப்பதுடன் ஏனைய புலிகள் தலைவர்களையும் இதன்போது சந்திக்கலாமென்றும் திரு. தொண்டமானுக்கு அக்குழு கூறியுள்ளது. [சி]

## வீரவணக்கம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியேற முற்பட்டபோது நேற்று முன்தினம் படுகாயமடைந்து நேற்று வீரமரணமடைந்த, நேரு அவர்களுக்கு [பரராசசிங்கம் குகநாதன் - புத்தூர்) விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீரவேங்கை நேருவின் பூதவுடல் இன்று பொதுமக்களின் அஞ்சலிக்காக புத்தூர் மாவீரர் கட்டடத்தில் பகல் 12 மணி முதல் 3 மணி வரை வைக்கப்பட்டு, பின்பு நடைபெறும் அஞ்சலிக் கூட்டத்தின் இறுதியில் வீரவேங்கையின் புகழுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, கோப்பாய் மாவீரர் மயானத்தில் அக்கினியுடன் சங்கமம் ஆக்கப்படும். (வி)

## தொண்டமான்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராக இருப்பதாக அமைச்சர் திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

புலிகளுடன் எவ்வாறு தொடர்புகொள்வது எனத் தாம் இன்னும் முடிவுசெய்யவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/188384/81,